முதலாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 07.07.2025
O.S.No. 90/2018

வா.சா.1 – கலா
2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .

குலசேகரம்புதூரில் நான் கலை ஆசிரியராக வேலை பார்த்தேன். நான்வரலாற்றில் முதுநிலை பட்டதாரி கல்வியியல் இளங்கலை படித்துள்ளேன். நான் இரண்டு அரசு பள்ளியில் வேலை பார்த்துள்ளேன். எனக்கு குறிப்பாணை எதுவும் வழங்கப்படவில்லை.எனது கணவருக்கு தெரியாமலே எழுதி வாங்கப்பட்ட சொத்தை மீட்பதற்காகவே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் 2003ம் ஆண்டு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். 2004 வரை சுசீந்திரத்தில் எனது கணவருடன் வாழ்ந்ததாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு 2005 ஜனவரி மாதம் வரை சேர்ந்து வாழ்ந்தோம்.

2. எனது பிராதில் 5ம் பத்தியில் எனது கணவர் கொடுமை படுத்தியதாக சொல்லியுள்ள விவரத்திற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். பிராது பத்தி 1ல் 2004 ல் இருந்து 2008 வரை குடிப்பழக்கத்திற்கும், போதை பழக்கத்திற்கும் எனது கணவர் அடிமையாகி மனநிலை சிகிட்சை பெற்று வந்ததாக சொல்லியுள்ள விபரத்திற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மருந்து சீட்டுகளும் கொடுத்துள்ளேன். மருத்துவ சான்றிதழ் கொடுத்துள்ளேன். மருந்து சீட்டுகளும், மருத்துவ சான்றிதழும் கொடுத்த மருத்துவரை விசாரித்தால் தான் நிரூபிக்க முடியும் என்றால் சரிதான் அவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன்.

3. 2005ல் இருந்து எனது கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்த போது எனது கணவரிடம் இருந்து ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பிராது பத்தில் 9ல் 1 ம் பிரதிவாதி மாதம் ரூ.10,000/- ஓய்வு ஊதியம் பெற்று வருவதாக சொல்லிய விபரத்திற்க அவரது வங்கி கணக்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவரது ஓய்வு ஊதியம் வங்கி கணக்கில் தான் வரவு செய்யப்படுகிறது என்றால் சரிதான். அவரது வங்கி கணக்கிலிருந்து அவரே தானியங்கி இயந்திரத்திலிருந்து எடுத்து செலவழிக்கிறார் என்று சாட்சி சொல்லிவிட்டு தற்போது அதனை மாற்றி அவரது அண்ணன் மகன்கள் மூலமாக

எடுப்பதாக சொல்கிறார். உண்மையில் எனது கணவர் அவரது வங்கி கணக்கை அவரே செயல்படுத்தி வருகிறார் என்றாலும், வழக்கிற்காக அதனை மறைத்து பொய்யாக சாட்சி அளிக்கிறன் என்றாலும் சரியல்ல.

4. ஓய்வு ஊதியம் பெறுவதற்கு வருடாவருடம் லைப் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கிறாரா நல்ல மனநிலைமையில் இருக்கிறாரா என்பதை லைப் சான்றிதழுடன் சரிபார்ப்பார்கள் என்றால் சரியல்ல உயிருடன் இருக்கிறார்களா என்று மட்டும் சரிபார்ப்பார்கள். மனநிலைமையை சரி பார்க்க மாட்டார்கள். இராணுவ கேன்டீன் அட்டையை வருடா வருடம் புதுப்பிக்க வேண்டுமா என்றால் தேவையில்லை. அந்த கேன்டீனில் பொருட்களை எனது கணவர் மட்டுமே நேரடியாக வாங்க முடீயும் என்றால் சரியல்ல. நான் தான் வாங்குவேன். அவரது அண்ணன் மகன்கள் மூலமாக நான் வாங்கி கொள்வேன். எனக்கும், எனது கணவருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதால் அவரது அண்ணன் மகன்கள் மூலம் நான் அனைத்து வேலைகளையும் செய்கிறேன் என்றால் சரியல்ல. மனநிலை சரியில்லாத கணவரை நான் பார்க்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

5. வயதான எனது பெற்றோர்களை நான் தனி ஆளாக சமாளித்து வருகிறேன். எனது கணவரை வைத்து பார்க்க அளவிற்கு வசதியில்லை. எனது கணவர் வீட்டு கதவை உடைத்து விடுவார். துணியை எரித்து விடுவார், டேபிள், செயர்களை உடைத்துவிடுவார், நான் தனியாக இருப்பதால் அவரை பார்க்கமுடியவில்லை அவரது அண்ணன் பார்த்து கொள்வார். எனது கணவரை மனநிலை சம்பந்தமாக மருத்துவ உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிட்சை கொடுத்துள்ளேனா என்றால் 2004 மார்ச் மாதம் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிட்சை கொடுத்தேன் மருத்துவர் நாகராஜனிடம் சிகிட்சை கொடுத்தேன். அங்கு உள்நோயாளியாக தங்குவதற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. அங்கு சிகிட்சை பெற்றதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது எனது கணவரை உள்நோயாளியாக சிகிட்சை அளிக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

6. பிராது 10ம் பத்தியில் குறைவான தொகையை பெற்றுக்கொண்டு எனது கணவர் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்ததாக சொல்லிய விபரத்திற்கு அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரியவில்லை சாட்சி கையொப்பம் போட்ட நபர்களை எனக்கு நேரடியாக

தெரியாது. பிராதில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது கணவர் நல்ல மனநிலையில் இல்லாத போதும் கொட்டாரம் சார்பு பதிவாளர் பதிவுக அலுவலர் பத்திரம் பதிவு செய்தார் என்ற விபரத்திற்கு அவர் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அதுபோல் 2, 3 பிரதிவாதிகள் சார்பு பதிவாளரிடம் சேர்ந்து 1ம் பிரதிவாதியை ஏமாற்றி பத்திரம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள விபரத்திற்கு 2, 3 பிரதிவாதிகள் மீதோ, சாட்சிகள் மீதோ, சார்பு பதிவாளர் மீதோ குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை.

7. 2005ம் ஆண்டு 1ம் பிரதிவாதியை விட்டு பிரிநத பிறகு அவரை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. அதன் பின்பு அவருடன் சேர்ந்து வாழ்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்த போது எனது கணவருக்கு நீதிமன்ற காப்பாளர் வேண்டி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை என்று கூறிவிட்டு சாட்சி தற்போது எனது மாமியாரை எனது கணவருக்காக காப்பாளராக நியமித்து இருந்தேன் பின்பு அவரால் வரமுடியவில்லை என்பதால் நீதிமன்றமே காப்பாளரை நியமித்து உத்தரவிட்டது. எனது மாமியாரை காப்பாளராக நியமித்த விபரம் பிராதில துலங்கவில்லை. 2வதாக நாங்கள் மனு தாக்கல் செய்தோம். முதலாவதாக இல்லை. உண்மையில் எனது கணவர் மனநோயால் பாதிக்கப்படவில்லை என்பதால் காப்பாளர் நியமிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. பிராது அடிப்படையில் நீதிமன்றம் தானாக முன்வந்து காப்பாளர் நியமிக்க நடவடிக்கை எடுத்தது என்றால் சரியல்ல. முதன்மை வாக்குமூலத்திலோ, பிராதிலோ, எந்த தேதியிலிருந்து எனது கணவர் மனநோயால் பாதிக்கப்பட்ட விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். தேதி மாதம் சொல்லவில்லை, வருடம் மட்டும் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் முதல்தகவல் அறிக்கை எண்.294/2006 பதிவு செய்யப்பட்டு அதன் நகலை என் வசம் குடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் யார் மீது என்ன காரணத்திற்காக என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 15.11.2004ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட புகார் ஏற்பு ரசீதிற்கான மனுவினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. மனு ரசீதில் புகாரின் விபரங்களோ யார் மீது புகார் என்றோ

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.8 இரணியல் காவல் நி லையத்தில் பெறப்பட்ட ஆவணத்திலும் யார் மீது கொடுக்கப்பட்ட புகார் என்றோ, புகாரின் விபரங்களையோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் யார் மீது கொடுக்கப்பட்ட புகார் என்றோ, புகாரின் விபரங்களையோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் நான் புகார்தாரர் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா புகார் கொடுத்தார். இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியில்லை. வா.சா.ஆ.11 ஆவணத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.12 ஆவணத்தின் உண்மை தன்மையை அறிந்து கொள்வதற்கு அதனை கொடுத்த மருத்துவரை விசாரித்தால் மட்டுமே தெரிய வரும் என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் விசாரித்தாலும் தெரியும். அந்த காயம் தற்போது எனது வலது நெற்றியில் தழும்பாக உள்ளது அதனை பார்த்தாலும் தெரியும் என்று சாட்சி அவரது நெற்றியை காண்பித்து கூறுகிறார். மருத்துவரை விசாரிக்க நான் தயாராக உள்ளேன். வா.சா.ஆ.12 ஆவணத்தின் 1ம் பிரதிவாதி சிகிட்சை பெற்ற விபரம் துலங்காது என்றால் சரியல்ல. 31.07.2004ல் அனைத்து மகளிர் காவல் நிலையம் குளச்சலில் கொடுத்த புகாரானது வா.சா.ஆ.15 என்றாலும், அ து நான் கொடுத்த புகார் என்றாலும் சரிதான்.

11. அந்த புகாரில் 1ம் பிரதிவாதி மனநோயாளி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு அவமானமாக இருந்தது என்பதால் சொல்லவில்லை. வா.சாஆ.5 தொகுப்பில் 1ம் பிரதிவாதி மனநோயாளி என்பது துலங்காது என்றால் சரியல்ல. அந்த மருத்துவ சீட்டை அளித்த மருத்துவரை விசாரித்தால் தான் உண்மை துலங்கும் என்றால் சரிதான். நான் விசாரிக்க தயாராக உள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் 1ம் பிரதிவாதி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து தமிழில் அவரது பெயரை எழுதியுள்ளார் என்றால் சரிதான். அது அவரது கையொப்பம் மற்றும் கையெழுத்து என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பக்கம் 8ல் 1ம் பிரதிவாதியின் அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டு பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி லாறி ஓட்டிக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 23.08.2006 TN 23 B 4815 என்ற பதிவு எண் கொண்ட லாரியை 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் மூலம் பெறப்பட்ட தொகையில் லாரி சொந்தமாக வாங்கி பயன்படுத்தி வந்தார் என்றால் தெரியாது. அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. 2, 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் நியாபகம் இல்லை. வழக்கு விபரங்களை முழுமையாக தெரிந்து கொள்ளாமலே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. 25.08.2006ம் தேதி எனது கணவர் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 02.09.2006 ம் தேதி நான் பதில் அறிவிப்பு செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய பதில் அறிவிப்பில் எனது கணவரின் மனநிலையை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். 2, 3ம் பிரதிவாதியின் பெயரில் எனது கணவர் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை பற்றிய விபரம் 20.01.2017ம் தேதி தெரிய வந்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 18.11.2016ம் தேதி நான் வில்லங்க சான்றிதழ் எடுத்துள்ளதாக வா.சா.ஆ.3 ல் ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான்.

14. முந்தைய வழக்கறிஞர் அதனை எடுத்து பார்த்து எனக்கு கொடுத்ததன் பெயரில் தான் பின்பு தெரிந்து கொண்டேன். 2017ல் கிரைய ஆவணத்தை பற்றி தெரிந்து கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல. 2006ம் வருட கிரைய ஆவணத்தை 2017ல் பொய்யாக சொல்லி வழக்கு காலவரையறை சட்டத்திற்காக பொய்யாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 8 வருட காலம் காத்திருந்து இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. அதை தெரிந்த உடனே தாக்கல் செய்திருப்பேன்.

15. முந்தைய வழக்கறிஞர் தான் இந்த வழக்கிற்கு தேவையான எல்லாவற்றையும் தயார் செய்தார் என்றால் சரியல்ல. நான் சொல்லி அவர் தயார் செய்தார், வில்லங்க சான்றிதழும் வா.சா.ஆ.2 ஆவணத்தையும் மட்டும் அவர் எடுத்து கொடுத்தார். அந்த விபரங்கள் தெரியாததால் அவர் எடுத்து கொடுத்தார். எனது கணவர் எத்தனை சொத்துக்களை விற்றால் என்றால் வேறு ஒரு சொத்தை விற்றார். இரவிபுதூர் கிராமம் புதிய புல எண்.181/9ல் உட்பட்ட 10 சென்ட் வீட்டு மனையை 2004ம் ஆண்டு

நவம்பர் மாதம் 4ம் தேதி விற்பனை செய்தார் . 12 வருடங்களுக்கு பின்பு மேற்படி 2004ம் ஆண்டு கிரைய பத்திரத்தை நான் தெரிந்து கொண்டேன். அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று வழக்கறிஞர் சொல்லிவிட்டார், அதனால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. இல்லை என்றால் நான் அதற்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன்.

16. 2004ம் ஆண்டு கிரைய ஆவணத்தையும் முந்தைய வழக்கறிஞரே எடுத்து கொடுத்தார், அவர் எங்கள் வீட்டிற்கு ஜெபம் செய்வதற்காக அடிக்கடி வீட்டிற்கு வருவார், அதன் மூலம் எனக்கு பழக்கம். எனது கணவர் மீது போக்சோ வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றாலும அதனை முந்தைய வழக்கறிஞர் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கின் ஆண்டு எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கு முடிந்து விட்டதா எனறால் முடிந்து விட்டது. எனது கணவர் பா லியல் ரீதியாக தொந்தரவு கொடுக்கவில்லை என்று மருத்துவர் கூறிவிட்டார். அந்த குழந்தை மாடுமுட்ட வரும் போது எனது கணவர் விலக சொன்ன போது அந்த குழந்தைக்கு காலில் ஏற்பட்ட காயத்திற்கு போக்சோ வழக்கு கொடுத்துவிட்டார்கள். அதிலிருந்து அவர் விடுதலை ஆகிவிட்டார். மேற்படி வழக்கில் எனது கணவர் மனநிலை சரியில்லாதவர் என்று துலங்காது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

17. வழக்கு சொத்தை 2, 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறாரகள் என்றால் இல்லை, அது வயல் நி லம் ஆகும். அதில் நாங்கள் விவசாயம் செய்து வந்தோம். கிரையம் கொடுத்த பிறகு நாங்கள் விவசாயம் எதுவும் செய்யவில்லை. தற்போது மணவிளையை சேர்ந்த ஆதி என்பவர் 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்து குத்தகை பெற்று நெல் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உரிமைமீட்பு பரிகாரத்தை இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல. எ பட்டிகைக்கான வழக்கு சொத்திற்கான சந்தை மதிப்பு தவறானது என்றால் சரியல்ல. மதிப்பு ரூ.84,500/- ஆகும். இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. அது எத்தனை சென்று என்றால் 65 சென்ட் நிலம் ஆகும். தற்போது தாவா சொத்திற்கு அருகில் நான்கு வழி சாலை வசதி உள்ளது என்றால் சரியல்ல. மண்ரோடு போட்டுள்ளார்கள். சிறிது தூரத்தில் நான்கு வழி சாலை உள்ளது.

18. கன்னியாகுமரி மாவட்டங்களில் சாலை வசதி உள்ள இடங்கள்

சென்ட் ரூ.1 லட்சத்திற்கு குறைவான மதிப்பு எதுவும இல்லை என்றால் சரியல்ல. அரசு மதிப்பீட்டின்படி நான் மதிப்பீடு செய்துள்ளேன். உரிய மற்றும் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் தள்ளுபடி செய்யடுகிறது என்றாலும் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் உரிய விலை கொடுத்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளாரக்ள் என்றாலோ அவர்கள் வெளிநாட்டில் வசித்து வருவதால் இந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.. அதனால் தான் 2004 ல் எனது கணவர் கிரையம் கொடுத்த மற்றொரு சொத்தை பொறுத்து எந்த ஒரு பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்திலும் எனது கணவர் மனநிலை சரியில்லாதவர் என்று துலங்கவில்லை என்றால் சரியல்ல.